# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 21.03. 2021ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.4**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.5**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.6**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.7**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2022 –2023 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம் மற்றும் 2021–2022 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு நகர்மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அங்கீகரிக்கலாம்.
**அங்கீகாரம் அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.8**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்களுக்கான மின் கட்டணம் 2022–23 ஆம் ஆண்டிற்கு செலுத்துவதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்படி தொகையினை நகராட்சி கல்விநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.725/2020/பி1)

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி கல்விநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
**கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.9**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான 30 வார்டுகளிலும் உள்ள நகராட்சியால் பராமரிப்பு செய்யப்பட்டுவரும் சிறுமின்விசை பம்ப் – களுக்கான மின்கட்டணம் 2022–23 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய தோராய செலவினம் ரூ.30.00 இலட்சம் ஆகும். மேற்படி சிறுமின்விசை பம்ப் களுக்கான மின்கட்டணத்தினை செலுத்தவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.10**

8. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பராமரிப்பு செய்யப்பட்டு வரும் வாகனங்கள் TN 36 AC 6320, TN 36 F 7005 மற்றும் TN 36 D 2709 ஆகிய வாகனங்களுக்கு டீசல், ஆயில் கிரீஸ் ஆகியவை பிடிப்பதற்கும், F.C கட்டணம், அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகள், இன்சூரன்ஸ் மற்றும் பழுதுபராமரிப்பு பணிகள் ஆகியவை மேற்கொள்வதற்கு 2022-23 ஆம் ஆண்டிற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.11**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திற்கு பெறப்பட்ட உயர்மின் அழுத்த மின் இணைப்பு HT-10 – க்கான ஆண்டு மின் கட்டணம் (2022-23) தோராயமாக ரூ.1.50 கோடி ஆகும். மேற்படி தோராய செலவினம் ரூ.1.50 கோடி ரூபாய் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.12**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் தெருமின் விளக்குகளுக்கான (1.4.2022 முதல் 31.3.2023 வரை) 2022 -23 ஆம் ஆண்டிற்கான தோராய மின் கட்டண செலவினம் ரூ.60.00 இலட்சம் ஆகும். மேற்படி மின் கட்டண தொகையினை மின்வாரியத்திற்கு நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.13**

11. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.38984/2014/SBM நாள்.31.01.2022 இன் படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதிகளில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியினை மேற்கொண்டு வரும் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களை விநியோகம் செய்து வரும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தகாலம் கடந்த 15.01.2022 ஆம் தேதியில் முடிவடைந்த நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்தகாலத்தினை 15.01.2022 ஆம் தேதியிலிருந்து தூய்மை இந்தியா திட்டம் மூலம் புதிய ஒப்பந்தம் இறுதி செய்யும் காலம் வரை சம்மந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து 28.02.2022 முதல் தொடர்ந்து பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களை விழிப்புணர்வு மேற்கொள்ளும் பணியில் ஈடுபடுத்தி பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2475/2020/எச்1)

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி 28.02.2022 முதல் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி விழிப்புணர்வு பணி மேற்கொண்டு வருவதை மன்றம் ஏற்கலாம்.

1. **அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.14**

12. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண் TN 36 J 6885 இன் தகுதி சான்று காலம் 17.02.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. வாகனங்கள் பராமரிப்புக்கு ஆகும் செலவினங்களுக்கு மன்றத் தீர்மானம் எண். 317 நாள். 25.01.2022 இல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வாகனம் பழுது நீக்கம் செய்வதற்கு 10.03.2022 இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **ந.க.எண்.0167/2022/எச் 1**

| வ. எண். | நிறுவனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ கணபதி மோட்டார் ஒர்க்ஸ்,<br>20 A, புத்தர் வீதி,<br>நாய்க்கன்காடு,<br>கோபிசெட்டிபாளையம் | 64,900/- |

| | | |
|---|---|---|
| 2 | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>1, சேலம் மெயின் ரோடு,<br>மேட்டூர் டேம், மேட்டூர். | 65,000/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் ரூ. 64,900/– அளித்துள்ள வரிசை எண். 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமான M/s. ஸ்ரீ கணபதி மோட்டார் ஒர்க்ஸ், 20 A, புத்தர் வீதி, நாய்க்கன் காடு, கோபிசெட்டிபாளையம் பணிமனைதாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**வரிசை எண்.1 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.15**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 24,26,28,29 மற்றும் 30 ஆகிய வார்டுகளில் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து 30 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.03.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA 2 நாள். 02.10.2021 இன் படி நகராட்சிகளில் துப்புரவு பணிகளை வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள தேவைப்படும் பணியாளர்களுக்கான அளவுகோல்கள் நிர்ணியத்து பொது வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு அளவுகோல்களின் படி தேவையான துப்புரவு பணியாளர்கள் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி வழங்கக் கோரி, இவ்வலுவலக கடித ந.க.எண். 2604/2021/எச் 1 நாள். 26.11.2021 கடிதத்தின் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு இந்நகராட்சிக்கு நிர்வாக அனுமதி வழங்க கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

மேலும், M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 அவர்களின் 23.12.2021 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.03.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 2415/2020/எச்1 நாள். 31.12.2020 செயல்முறை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.690/– என்னும் விலைவிகிதத்திலேயே கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 5 வார்டுகளிலும், துப்புரவு பணிகளை எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், நகரின் பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.04.2022 முதல் 31.05.2022 ஆம் தேதி வரை இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 690/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 30 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.12.62 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2415/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதி அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.16**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 57 பணியாளர்களை (DBC Workers) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி M/s S.S. Engineerrs,3/6, Kamadenu Nagar,Vadavalli, Coimbatore – 641041 அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 1231/2020/எச் 1, நாள். 01.03.2021 – இன் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 545.50/– (ESI and EPF உட்பட) என்னும் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் தினமும் 57 DBC பணியாளர்களை இந்நகராட்சிக்கு வழங்க M/s S.S. Engineerrs,3/6, Kamadenu agar,Vadavalli, Coimbatore 641041 அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு பணி

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தி இந்நகராட்சியில் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதன் பலனாக கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிலும் நாளது தேதி வரையும், டெங்கு பாதிப்புகள் குறைந்துள்ளது என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.03.2022 – ஆம் தேதியுடன் முடிவடையும் நிலையில் ஒப்பந்த காலத்தினை பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், M/s S.S. Engineerrs, 3/6, Kamadenu Nagar,Vadavalli, Coimbatore 641 041. அவர்களின் ஒப்பந்த காலத்தினை 01.04.2022 முதல் 31.05.2022 ஆம் தேதி வரை காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 545.50/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 57 DBC பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 18.96/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1231/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.17**

15. இந்நகராட்சியில் மொத்தம் உள்ள 30 வார்டுகளில் சுமார் 11.7 MT மக்கும் குப்பைகள் தினமும் சேகரிக்கப்பட்டு வருகிறது. ராமர் எக்ஸ்டென்சன் பகுதியில் உள்ள 4 MT கொள்ளளவு கொண்ட நுண் உரமாக்கல் மையத்திலும், கரட்டூர் பகுதியில் உள்ள 3 MT கொள்ளளவு கொண்ட நுண் உரமாக்கல் மையத்திலும் மொத்தம் 7 MT மக்கும் குப்பைகளை அங்கு பொருத்தப்பட்டுள்ள அரைக்கும் இயந்திரத்தின் மூலம் அரைத்து தூள் ஆக்கப்பட்டு அங்கு அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் கொட்டப்பட்டு Aerobic Composting முறையில் உரமாக்கப்பட்டு மக்கும் குப்பைகள் இறுதியாக்கம் செய்யப்படுகிறது. மீதமுள்ள 3.7 MT மக்கும் குப்பைகள் இயற்கை எரிவாயு தயார் செய்யும் பிளாண்ட் மற்றும் OCC யில் கையாளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேலே குறிப்பிட்டுள்ள உரமாக்கல் முறையில் மக்கும் குப்பைகளை விரைந்து மக்கச் செய்து உரமாக்குவதற்கும் உரத்தின் தரத்தினை உயர்த்துவதற்கும் நுண் உரமாக்குதல் மையத்தில் குப்பைகளை கையாளும் பொழுது ஈ – க்களால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளை தடுப்பதற்கும் மையத்தினை சுகாதாரமாக பராமரிக்கவும், தேவையான MAPLE EM.1 Enviro Pro Solution கொள்முதல் செய்து பயன்படுத்த வேண்டியுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.20139/MA.IV(2)/2019–1 நாள்.26.08.2019 இன் படி இதற்கு தேவையான MAPLE EM.1 திரவத்தினை தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி என்னும் கூட்டுறவு பண்டகசாலையில் கொள்முதல் செய்து பயன்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள்.
எனவே இந்நகராட்சியின் 2 நுண் உரமாக்கல் மையங்களிலும் கையாளப்படும் மக்கும் குப்பைகள் உரமாக்கும் பணிகளை விரைந்து நல்ல முறையில் மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி அவர்களிடம் அந்நிறுவனத்தின் விலை விகிதமான ரூ.972/– (லிட்டர் ஒன்றுக்கு வரிகள் உட்பட) விலையில் 100 லிட்டர் கொள்முதல் செய்து பணிமேற்கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ. 97,500/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 440 /2022/எச் 1

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.18**

16. இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினமும் உருவாகும் கழிவுகளை வீடுவீடாக சென்று தரம்பிரித்து சேகரிப்படும் மக்காத கழிவுகளில் மறுசுழற்சிக்குப் பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள், இரப்பர் தோல்பொருட்கள், உடைந்த மரக்கட்டைகள், உடைந்த மரச்சாமான்கள், பழைய மிதியடிகள் மற்றும் இதர எரியும் தன்மையுடைய கழிவுகளை முறைப்படி அப்புறப்படுத்திட இன்ஸ்னிரேட்டர் வசதி, இந்நகராட்சியில் இல்லாததால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் மேற்படி கழிவுகளை M/s. Ultra Tech Cement Factory, Ariyalur, M/s. Dalmia Cement Factory, Dalmiapuram, M/s ACC Cement Factory, மதுக்கரை, கோயம்புத்தூர், அவர்களுக்கு ஆலையின் அனுமதியினை பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப கொண்டு சென்று அப்புறப்படுத்த 01.04.2022 முதல் 31.03.2023 வரை தேவைக்கேற்ப வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தும் முறையில் ஈடுபடுத்தி கழிவுகளை கொண்டு சென்று இறுதியாக்கம் (Final Disposal Of Combustible Wastes) செய்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0344/2020/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.19**

17. இந்நகராட்சியின் 2022–2023 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், இரசீதுகள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.20,00,000/– ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**உத்தேச செலவினம் ரூ.10.00 (பத்துலட்சம்) லட்சம் மட்டும் அனுமதிக்கப்பட்டது. மனற்த்தீர்மான எண்.20**

18. இந்நகராட்சியின் 2022–2023 ஆம் ஆண்டிற்கு தேவையான கணினி தொடர்பான பொருட்கள் மற்றும் டோனர்கள், ஜெராக்ஸ் மெஷின் டோனர்கள் ஆகியைவை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.20,00,000/– ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**உத்தேச செலவினம் ரூ.10.00 (பத்துலட்சம்) லட்சம் மட்டும் அனுமதிக்கப்பட்டது. மனற்த்தீர்மான எண்.21**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள வார்டுஎண்கள் 4,5,9,10,11,12,13,14,15,16,25 மற்றும் தினசரி சந்தை ஆகிய பகுதிகளில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து 92 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.03.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA 2 நாள். 02.10.2021 இன் படி நகராட்சிகளில் துப்புரவு பணிகளை வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள தேவைப்படும் பணியாளர்களுக்கான அளவுகோல்கள் நிர்ணியத்து பொது வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு அளவுகோல்களின் படி தேவையான துப்புரவு பணியாளர்கள் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி வழங்கக் கோரி, இவ்வலுவலக கடித ந.க.எண். 2604/2021/எச் 1 நாள். 26.11.2021 கடிதத்தின் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு இந்நகராட்சிக்கு நிர்வாக அனுமதி வழங்க கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

மேலும், M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் .01.2022 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.03.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 2914/2020/எச்1 நாள். 26.02.2021 செயல்முறை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.649/– என்னும் விலைவிகிதத்திலேயே கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 11 வார்டுகளிலும், துப்புரவு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், நகரின் பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.04.2022 முதல் 31.05.2022 ஆம் தேதி வரை இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 649/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 92 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.36.42 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.( ந.க.எண்.2914/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.22**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகள் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து 19 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.03.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது

இந்நிலையில் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 அவர்களின் 23.12.2021 ஆம் நாளிட்ட கடித்தில் 31.03.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிக்கான ஒப்பந்த காலத்தினை இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 2417/2020/எச்1 நாள். 31.12.2020 உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ. 690/– என்னும் விலைவிகிதத்திலேயே கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட 9 நகராட்சி பள்ளிகளிள் தூய்மைப் பணிகளில் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.04.2022 முதல் 31.05.2022 ஆம் தேதி வரை இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 690/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 19 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2417/2020/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.23**

21. இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் பராமரிப்பில் உள்ள டிராக்டர் FRONT END LOADER TN 36 AJ 2139 வாகனத்தின் முன்பக்க டயர்கள் இரண்டும் பட்டன் முழுவதும் தேய்ந்து அடிக்கடி பஞ்சர் ஆகி விடுவதால் வாகனத்தினை தொடர்ந்து இயக்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு MRF கம்பெனியின் 8.3–24 அளவுள்ள புதிய முன்பக்க டயர்கள் மற்றும் டியூப்புகள் இரண்டு எண்ணிக்கை வாங்கி பொருத்திக் கொள்வதற்கும், மேற்படி டயர்களை MRF டயர் விநியோகம் செய்யும் நிறுவனங்களிடமிருந்து இரண்டு செட் டயர், டியூப் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ. 21,000/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0442 /2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.24**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு A பிளாக்.1 க.ச.எண். 96 நகரளவை எண்.87 இல் 40 அடி திட்ட சாலைக்கு நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய அனுமதி வழுங்குமாறு திரு GR. பாலசுப்பிரமணியம் தகப்பனார் பெயர்.G.K.இராமசாமி என்பவரால் 15.02.2022 இல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ந.க.எண்

இதனை தொடர்ந்து மேற்படி இடத்தினை நகரசார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளரார்ல நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் வார்டு எண் Aலக்கம்பட்டி கிராமம் பிளாக் .1 நகரளவை எண் 87/1B1A இல் புலத்தணிக்கை செய்து மனுதாரர் கோரிய 40 அடி அகல கிழமேல் திட்டச்சாலை அளவீடு செய்து அதன் பரப்பளவு 0.2560.0 ஏக்கர் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 0.2560.0 ஏக்கர் இடத்தினை 40 அ திட்டச்சாலைக்கு திரு.G.K.இராமசாமி ஐயர் மகன் திரு, பாலசுப்பிரமணியம் என்பவர் தமக்கு பாத்தியப்பட்ட பூமியினை (திட்டசாலை) நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யவும் மற்றும் பத்திர பதிவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது ( ந.க.எண்.301/2022/எப்1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ஒத்திவைக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.25**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு நகரமைப்பு பிரிவில் கட்டிட அனுமதி வழுங்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பங்களின் மீது 30 நாட்களுக்குள் கட்டிட விண்ணப்பங்களின் மீது முடிவெடுக்கப்பட வேண்டும் என காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 91 மற்றும் 91 A ஆகியவற்றில் கட்டடிட அனுமதி விண்ணப்பங்களின் மீது நகராட்சி ஆணையர் ஒப்புதல் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.எனவே உரிய காலக்கெடுவில் காலதாமதம் இன்றி முடிவெடுக்கவும் வழங்கவும் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும் கட்டிட அனுமதி விண்ணப்பங்கள் மீது கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி ஆணையரால் ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் . 438/2021/'எப்1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ஒத்திவைக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.26**

ஓம்.திரு.என்.ஆர்.நாகராஜ்

தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி